**<u>IN THE COURT OF THE PRINCIPALDISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No.169/2002**

Deposition of **<u>D.W.2</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 13.03.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : அழகுவேல் Father's Name : துரைசாமி உடையார்

துவக்க நேரம்: 04.27 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>

1) நானும், எனது அப்பாவும், பிரதிவாதி சித்ராவுக்கு விற்ற இடத்திற்கு கிழக்கில் தற்பொழுது ஒரு மணிவேல் என்பவர் வசித்து வருகிறார் என்றால் சரிதான். மணிவேல் என்பவர் எனது பெரியப்பாவின் பேரன் என்றால் ஆமாம். மகள்வழி பேரன். மணிவேல் தாத்தாவின் பெயர் என்னவென்றால் குழந்தைவேல் உடையார். குழந்தைவேல் உடையாருக்கும், எங்களுக்கும் சரிபாதி சொத்து என்றால் பாகம் உள்ளது, ஆனால் சரிபாதியா என்று தெரியவில்லை.

2) இரண்டு பாகத்திற்கும் கிழக்கில் ஒரு தென்வடல் சந்து செல்கிறது என்றால் சரிதான். இதற்கெல்லாம் வாயிற்படி வடக்கு பார்த்தவாறு ராஜவீதியில் அமைந்துள்ளது என்றால் சரிதான். எனது அப்பாவிற்கும், குழந்தைவேல் உடையார் என்பவருக்கும் இரண்டு மூலப்பத்திரங்கள் என்றால் சரிதான்.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.169/2002, Dt.13.03.2025

3) மேற்சொன்ன இரண்டு பத்திரங்களில் ஒன்று கடந்த 04.12.1932 மற்றொன்று 23.02.1948 தேதியிட்டது என்றால் சரிதான். கடந்த 1932 தேதியிட்ட கிரயப்பத்திரத்தில் கிழமேல் 36 காலடி என்றும் தென்வடல் 42 காலடி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடந்த 1948 தேதியிட்ட கிரயப்பத்திரத்தில் கிழமேல் 20 காலடி என்றும் தென்வடல் 39 காலடி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) மேற்கண்ட 1932 மற்றும் 1948 தேதியிட்ட இரண்டு கிரயப்பத்திரங்களும்தான் மூலப்பத்திரங்கள் என்றாலும் இந்த இரண்டு பத்திரங்களிலும் உள்ள சொத்துக்களை எனது தகப்பனாரும், குழந்தைவேல் உடையாரும் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். தற்பொழுது மணிவேல் உடையார் என்பவரின் வீட்டு நீள, அகலம் என்ன என்றால் தெரியவில்லை. அளந்து பார்க்கவில்லை.

5) என்னிடம் காட்டப்படும் கடந்த 1948 கிரயப்பத்திரத்தில் கண்டுள்ள சொத்து விவரத்தில் கீழ்க்கண்டவாறு சொத்து விவரம்,

"கிழமேல் ராஜவீதிக்கும் தெற்கு, உங்களுடைய வில்லைமனைக்கும், கூரைகட்டுமனைக்கும் மேற்கு, அரசன்குடி வேலாயுதம் மனைக்கும் வடக்கு, மேற்படியார் ஓட்டுவில்லை மனைக்கும் கிழக்கு" என்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பத்திரத்தில் இப்படிதான் உள்ளது. அரசன்குடி வேலாயுதம் வகையறா என்பது இந்த வழக்கின் வாதியின் முன்னோர்கள் என்றால் சரிதான்.

6) கடந்த 1932 மற்றும் 1948 ஆகிய இரண்டு கிரயப்பத்திரங்களில் உள்ளதை கூட்டினால் கிழமேல் 56 காலடி என்றால் சரிதான். ஒரு காலடி என்பது 3/4 அடி என்றால் ஒவ்வொரு நபருக்கும் வித்தியாசம் உள்ளது. காலடி என்பது அந்த காலத்தில் 3/4 அடி என்று அந்த காலத்தில் குறிப்பிடப்படும் என்றால் அது பற்றி தெரியாது. ஒரு முழம் என்பது எத்தனை அடி என்றால் ஆளாளுக்கும் வித்தியாசம் வரும், குறிப்பாக தெரியாது. எனது கைமுழம் என்பது எத்ததை அடி என்றால் ஆளாளுக்கு மாறுபடும், எனது கை முழம் எத்தனை அடி என்றால் எனக்கு தெரியாது நான் இதுவரை அளந்து பார்த்ததில்லை. சாதாரணமாக ஒரு முழம் என்பது 1-1/2 அடி என்றால் ஆளாளுக்கு வித்தியாசம் வரும், வழக்கமாக ஒரு முழம் என்பது 1-1/2 அடி என்று சொல்வார்கள் ஆனால் ஆளாளுக்கு வித்தியாசம் வரும்.

7) ஒரு பொய்யான இடத்தை காண்பித்து பொய்யான ஆவணத்தின்மூலம் சித்ராவிற்கு கிரயம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சரியாகதான் கொடுத்துள்ளேன் முதலில் வாதிக்கு அந்த இடத்திற்கு ரெக்கார்டு உள்ளதா முதலில் அதை காட்டுங்கள். இதற்கு வாதி தரப்பு வழக்கறிஞர், சாட்சி தெரிந்துகொண்டு வேண்டுமென்றே பதிலளிக்கிறார் என்று பதிவு செய்தார், பதிவு செய்யப்படுகிறது. சாட்சிக்கு இந்நீதிமன்றம், கேட்கும் கேள்விக்கு பதில் அளிக்குமாறு உத்தரவிடுகிறது.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.169/2002, Dt.13.03.2025

8) சித்ரா தாக்கல் செய்த ஆவணங்கள் பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் நீங்கள் என்னை கேள்வி கேட்க தேவையில்லை. என்னை குறுக்கு விசாரணை செய்யமாட்டீர்கள் என்று ஏற்கனவே சொல்லியுள்ளதால், நானும் பதில் சொல்லமாட்டேன் என்று வாதி தரப்பு வழக்கறிஞரிடம் சாட்சி பதில் அளித்தார். பதிவு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞர் வாதத்தில், சாட்சி அதிகார தோரணையில் பதில் அளிப்பதாகவும், அதனால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முடியாது என்று பதிவு செய்ய வேண்டி வாதிட்டார். பதிவு செய்யப்படுகிறது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வாதத்தில், சாட்சி பிரதிவாதிக்கு சொத்தை விற்ற நபர் அவரிடம் முரணான கேள்விகளை கேட்டதால் சாட்சி தன்மையாகதான் பதில் அளித்தார். இது அதிகார தோரணையில் அளித்த சாட்சியம் அல்ல. வாதி தரப்பு வழக்கறிஞர் சொல்வதுபோல் சாட்சி அதிகார தோரணையில் பதில் அளித்தாக சொல்லி பதிவு செய்வதற்கு ஆட்சேபனை தெரிவிப்பதாக வாதிட்டார். இரு தரப்பு ஆட்சேபனையும் பதிவு செய்யப்படுகிறது.

இந்நிலையில் மேலும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்தால் சுமூகமாக குறுக்கு விசாரணை செய்து முடிக்க முடியாத சூழல் நிலவும். எனவே, இந்நீதிமன்றம் தன்னிச்சையாக குறுக்கு விசாரணையை ஒத்திவைக்கிறது.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.169/2002, Dt.13.03.2025

முடிவு நேரம்:  05.17 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-S.Munusamy
Principal District Munsif, Attur.

Typed by Selvi. C. Sasikala -  O.S. No.169/2002, Dt.13.03.2025.